செ.வெ.எண்: 68 நாள்:24.08.2016

# பத்திரிகைச் செய்தி

**உடற்கல்வி இயக்குநர்/ஆசிரியர்/ஆசிரியைகளுக்கான மூன்று நாள் இருப்பிட புத்தாக்கப் பயிற்சி முகாம் - 2016-17**

தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் 2016-17-ம் ஆண்டுக்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் 40 வயதிற்குட்பட்ட 50 உடற்கல்வி இயக்குநர்கள்/உடற்கல்வி ஆசிரியர்/ஆசிரியைகளுக்கு விளையாட்டு பயிற்றுநர்கள் மற்றும் விளையாட்டு வல்லுநர்களைக் கொண்டு நீச்சல், ஸ்குவாஷ், ஜிம்னாஸ்டிக்ஸ், வாள்சண்டை, குத்துச்சண்டை, டேக்வாண்டோ, சதுரங்கம், சாலை சைக்கிள், கடற்கரை கையுந்துபந்து, கேரம், சிலம்பம், வளைபந்து, ஜூடோ மற்றும் பிற விளையாட்டுகளில் வந்துள்ள புதிய விதிமுறை மாற்றங்கள் ஆகியவற்றிற்கான மூன்று நாள் இருப்பிட பயிற்சி முகாம் புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டரங்கத்தில் 31.08.2016 முதல் 02.09.2016 முடிய நடத்தப்படவுள்ளது.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**